BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# 2021-2022 ஆண்டிற்கான இனவெறி எதிர்ப்பு மற்றும் சமத்துவத்திற்கான நிலைக்குழுவின் FCM க்கான துணைத்தலைவராக ப்ராம்ப்ட்டன் பிராந்திய கவுன்சிலராகிய ரொவீனா சான்ட்டோஸ் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

ப்ராம்ப்ட்டன், ON (ஆகஸ்ட் 5, 2021) – இன்றைய தினம், 2021-202 ஆண்டிற்கான இனவெறி எதிர்ப்பு மற்றும் சமத்துவத்திற்கான நிலைக்குழுவின் துணைத்தலைவராக ப்ராம்ப்ட்டன் பிராந்திய கவுன்சிலராகிய ரொவீனா சான்ட்டோஸ் அவர்கள் கனடிய நகராட்சிகளின் கூட்டமைப்பின் (FCM) தலைவராகிய ஜோவான் வாண்டர்ஹைடன் அவர்களால் நியமிக்கப்பட்டதாக FCM அறிவித்தது.

FCM இன் நிலைக்குழுக்கள் என்பவை, FCM சபையில் விரிவான விவாதத்திற்கு வழிவகுத்து முன்னுரிமை கொள்கை மற்றும் நிகழ்ச்சி நிரலில் இருக்கும் பிரச்சினைகள் குறித்த பரிந்துரைகளை வழங்குகின்றன. நிலைக்குழுக்களுக்கு அவற்றின் தலைமை மற்றும் துணைத் தலைமைப் பதவிகளுக்கு வலுவான தலைமை ஏற்பவர்கள் தேவைப்படுகின்றனர்; அவர்கள் தங்கள் ஆணை தொடர்பான பிரச்சினைகள் மற்றும் உத்திகள் பற்றிய குழுக்களின் ஆலோசனைகளை வழிநடத்துகின்றனர்; அனைத்து குழு உறுப்பினர்களும் கவனம் செலுத்தி ஆக்கரீதியான விவாதங்களில் ஈடுபடுவதற்கான வாய்ப்பை உறுதி செய்கின்றனர். ஒவ்வொரு குழுவும் வருடத்திற்கு மூன்று முறை கூடுகிறது; இயக்குநர்கள் சபை கூட்டங்களுடனும் ஒருமித்து கூடுகிறது.

ப்ராம்ப்ட்டன் நகரம் கனடிய நகராட்சிகள் மற்றும் எங்கள் கூட்டமைப்பின் பங்காளிகளுடன் கூட்டாண்மைகளை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது; மற்றும், ப்ராம்ப்ட்டன் குடியிருப்புவாசிகளுக்கான முன்னுரிமை கொண்ட, உள்கட்டமைப்பு, சீதோஷ்ணநிலை மாற்றம் மற்றும் வெள்ளத் தணிப்பு, போக்குவரத்து விரிவாக்கம், ஹுரோன்ட்டேரியோ-மெயின் செயின்ட் எல்ஆர்டி, மற்றும் கோவிட் -19 நிவாரணம் உள்ளிட்ட முக்கிய விஷயங்களைத் தொடர்ந்து வலியுறுத்துகிறது.

ஜூன் மாதத்தில், கவுன்சிலர் சான்ட்டோஸ் ஒரு வருட காலத்திற்கு கனடிய நகராட்சி கூட்டமைப்பு இயக்குனர்கள் சபைக்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். நகராட்சிகளின் நிர்வாக அமைப்பில் பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்கான FCM நிலைக்குழுவிலும், நகராட்சி நிதி மற்றும் அரசுக்கு இடையேயான ஏற்பாடுகளுக்கான நிலைக்குழுவிலும் மற்றும் நகராட்சி

உள்கட்டமைப்பு மற்றும் போக்குவரத்து கொள்கை குறித்த நிலைக்குழு ஆகியவற்றில் உறுப்பினராக உள்ளார்.

1901 ஆண்டு முதலே, கனடாவின் நகராட்சி ஆளுமைகளின் தேசிய குரலாக FCM இருந்துவருகிறது. கனடாவின் நகரங்கள் மற்றும் கிராமப்புற சமூகங்களில் துவங்கி, வடபகுதி சமூகங்கள் மற்றும் 20 மாகாண மற்றும் பிராந்திய நகராட்சி சங்கங்கள் வரை அனைத்து மட்டங்களிலும் 2,000 க்கும் மேற்பட்ட நகராட்சிகள் உறுப்பினர்களாக உள்ளடங்கியுள்ளனர். இவர்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து, ஒரு கடலோரத்திலிருந்து மற்றொரு கடற்கரை வரையிலுமான இருக்கின்ற  அனைத்து கனடியர்களில் 90 சதவிகிதத்திற்கும் மேலானவர்களுக்கு பிரதிநிதித்துவம் செய்கிறார்கள். முக்கிய பிரச்சினைகளில் FCM-இன் கொள்கையை அமைக்க கனடா முழுவதிலுமிருந்து நகராட்சி தலைவர்கள் ஒவ்வொரு ஆண்டும் கூடுகின்றனர்.

ப்ராம்ப்ட்டன் நகர சபையின் செயல்பாடுகள் மற்றும் கவுன்சில் காலத்திற்கான முன்னுரிமை கொண்ட விஷயங்கள், ஒரு கடற்கரையிலிருந்து இன்னொரு கடற்கரை வரை உள்ள பல கனடிய நகராட்சிகளை பிரதிபலிக்கின்றன; இவற்றில், பன்முகத்தன்மையைக் கொண்டாடுவது மற்றும் இனவெறி எதிர்ப்பு கொள்கை, மலிவுவிலையில் கட்டுபடியாகக் கூடிய வீட்டு வசதி, பேருந்து போக்குவரத்து, சீதோஷ்ண நிலைக்கான நடவடிக்கை மற்றும் வணிகங்கள் மற்றும் சமூகங்கள் COVID-19 தாக்கத்திலிருந்து விடுபட்டு பொருளாதாரத்தை பாதுகாப்பாக மறுதொடக்கம் செய்வதற்கான ஆதரவு ஆகியவை அடங்கும்.

**அறிஞர் கூற்றுக்கள்**

"ப்ராம்ப்ட்டன் நகரத்தில், நாங்கள் செய்யும் எல்லாவற்றிலும் மக்களை எங்கள் மனதில் கொண்டபடியே செய்யப்படுகிறது. எங்கள் அனைத்து திட்டங்கள் மற்றும் சேவைகளிலும் பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் அனைவரையும் உள்சேர்த்தல் மற்றும் தடைகளை நீக்குதல் ஆகியவற்றுக்கு நாங்கள் எங்களை அர்ப்பணித்துள்ளோம்; இதனால் எங்கள் குடியிருப்பாளர்கள் அனைவரும் இனம் அல்லது பாலினம் என்பன ஒரு  பொருட்டில்லாமல் நியாயமாகவும் சமமாகவும் நடத்தப்படுகிறார்கள். இனவெறி எதிர்ப்பு மற்றும் சமத்துவத்திற்கான நிலைக்குழுவின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டதில் நான்  கௌரவம் கொடுக்கப்பட்டிருக்கிறேன், மேலும் நம் நாட்டின் பன்முகத்தன்மையைக் கொண்டாட, சக நகராட்சிகளுடன் இணைந்து பணியாற்றவும்,  கனடிய நகராட்சிகளுடனும் மற்றும் கூட்டாண்மை அரசுடனும் வலுவான உறவை மேம்படுத்தவும் நான் ஆர்வமாக உள்ளேன். தொடர்ச்சியான கூட்டாண்மை மற்றும் ஒத்துழைப்பு மூலம், நாம் இனவெறிக்கு எதிராக போராடலாம், தடைகளை அகற்றி அனைவருக்குமான  ஒரு சமத்துவம் கொண்ட நாட்டை உருவாக்கலாம்; மற்றும் கனடா முழுவதும் போக்குவரத்து மற்றும் உள்கட்டமைப்பை மேம்படுத்தலாம்.

*- ரொவீனா சான்ட்டோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 & 5, ப்ராம்ப்ட்டன் நகரம்; உறுப்பினர், FCM இயக்குநர் சபை*

"ப்ராம்ப்ட்டன்வாசிகள் மற்றும் நம் நாடு முழுவதும் உள்ள அனைவருக்குமான நற்பலன்களைப் பெறுவதற்கு, அரசாங்கத்தின் அனைத்து நிலைகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பு அவசியம். நகர சபையின் சார்பாக, -இனவெறி எதிர்ப்பு மற்றும் சமத்துவத்திற்காக வாதாடும் வழக்கறிஞரும் எங்கள் குடியிருப்பாளர்களுக்கான நற்பலன்களைப் பெறுவதில் உறுதியாக இருக்கிறவருமான - கவுன்சிலர் சான்ட்டோஸ் அவர்கள், இனவெறி எதிர்ப்பு மற்றும் சமத்துவத்திற்கான நிலைக்குழுவின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். தடைகளை அடையாளம் கண்டு அகற்றி, எங்கள் நகர நிர்வாகம் செய்து வருகின்ற வேலையை அவர் தொடருவார் என்று எனக்குத் தெரியும்; இதில் எங்கள் ஊழியர்கள் மற்றும் குடிமக்களுக்கு சேவை செய்ய ஒரு சமத்துவ அலுவலகத்திற்கான அடித்தளம் அமைப்பது மற்றும் நகரத்தின் முதல் கருப்பு இனவெறி எதிர்ப்பு அமைப்பைத்பிரிவைத் தொடங்குவது போன்றவை இதில் அடங்கும். ப்ராம்ப்ட்டன் குடியிருப்பாளர்களுக்கு இருக்கும் முக்கியமான பிற பிரச்சினைகளாகிய போக்குவரத்து, கோவிட் -19 பாதிப்பிலிருந்து மீட்பு ஆதரவு மற்றும் பிற நற்பலன்களைப் பெற எங்கள் கூட்டாண்மை பங்காளிகளுடன் ஒத்துழைப்பு நல்குவார்..

*- பேட்ரிக் பிரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்புகள்**
ப்ரப்ஜோத் கைந்த்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல்தொடர்பு
905-874-3426 | Prabhjot.Kainth@brampton.ca